10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

01 அதிர்வு திங்கட்கிழமை நவம்பர் 27 2017 ethirolimed@gma 021 300 48 48

உதயன்

தமிழ் ஊடகப் பரப்பில் சாதனைகள் பல படைத்து அர்ப்பணிப்பு, தியாகங்களுடன் நிலையான இடம்பிடித்து இன்று அகவை 32ஐப் பூர்த்தி செய்யும் உதயன் நாளிதழ் குழுமத்துக்கு எமது வாழ்த்துக்கள்... பணி சிறக்கட்டும்.

-எதிரொலி குழுமம்-



# இன்று மாவீரர் நாள்

## தமிழர் தாயகம் எங்கும் எழுச்சி!

தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடி உயிர் நீத்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நாள் இன்றாகும். மாவீரர்களை நினைவேந்த தமிழர் தாயகம் முழுவதும் தயாராகி வருகின்றது.

அனைத்து இடங்களிலும் வழமைபோன்று மாலை 6.05க்கு தீபங்கள் ஏற்றபட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படும் எனத் தெரிவிக் 06▶



## ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 27

யாழ்ப்பாணம் பொம்மைவெளியில் வாய்க்காலுக்குள் போடப்பட்டிருந்த பழைய துப்பாக்கிகள், ரவைகள், குண்டுகள் சில யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்றுக் காலை 06▶

## களைகட்டியது தலைவரின் பிறந்தநாள்



யாழ்ப்பாணம், நவ. 27

தலைவர் பிரபாகரனின் 63 ஆவது பிறந்தநாள் நேற்றாகும். இதையொட்டி தமிழர் தாயகம், புலம்பெயர் தேசம் எங்கும் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் களைகட்டின. அத்துடன் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

வல்வெட்டித்துறையில் தலைவர் பிரபாகரன் பிறந்த வீட்டில் நள்ளிரவு 12 மணிக்கு கேக் வெட்டி இளைஞர்கள் சிலர் கொண்டாடினர். தொடர்ந்து பகல் 10 மணிக்கு வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அங்கு கேக் வெட்டிக் கொண்டாடினார். 06▶

## வவுனியாவில் முறுகல் நிலை

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளைக் கொண்டாடிய தமிழ் மாணவர்களை தடுக்க சிங்கள மாணவர்கள் முனைந்ததால் முறுகல் நிலை தோன்றியது.

தமிழ் மாணவர்கள் தமது விடுதியிலேயே தலைவரின் பிறந்த தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்தனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை 06▶



## இ.போ.ச பஸ் நாளை ஓடாது

யாழ்ப்பாணம் , நவ.27

வடக்கு மாகாணம் முழுவதும் இ.போ.ச. பஸ் சேவை நாளை செவ்வாய்கிழமை இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இ.போ.ச வடபிராந்திய முகாமையாளர் உபாலி கிரிவத்துட்டுவ மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் 06▶

## இராணுவம் குவிப்பு: கோப்பாயில் பதற்றம்



மாவீரர் நினைவேந்தலுக்காக கோப்பாய் துயிலும் இல்லம் அருகே காணியை துப்புரவு செய்ய முயன்றபோது இராணுவம் பெருமளவில் குவிக்கப்பட்டது. இதனால் அப்பகுதியில் பதற்ற நிலை நீடித்தது.

கோப்பாயில் முன்னர் மாவீரர் துயிலும் இல்லம் இருந்த இடத்தில் தற்போது இராணுவம் முகாம் அமைத்து உள்ளது. இதனால் 06▶

## நுணாவிலில் விபத்து: இருவர் சாவு

யாழிலிருந்து கொழும்பு சென்ற சொகுசு பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

நுணாவிலில் நேற்றிரவு 9.15 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில், நுணாவில் மேற்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கந்தையா மோகன்ராஜ் (30), 06▶

## யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு சென்றவரை தாக்கினார் மருத்துவர்?

யாழ்ப்பாணம், நவ.27

யாழ். போதனா வைத்தியசலையில் கண் சத்திர சிகிச்சைக்குச் சென்ற பெண்ணை மருத்துவர் ஒருவர் தாக்கியதுடன், முறையற்ற விதத்தில் ஏசினார் என்றும் பெண் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார். 06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES

Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தல்!

## மாவீரர் நாளுக்கு ஏற்பாடு செய்த இளைஞர்களுக்கு



கிளிநொச்சி, நவ. 27

கிளிநொச்சி, கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தின் மாவீரர் நாளுக்கான புனரமைப்பு பணிகள் நேற்று ஆரம்பமாகின. வீதித் திருத்தம், கொடிக்கம்பம் நடுதல், அலங்கரித்தல் போன்ற பணிகளும் நேற்று இடம் பெற்றன.

இந்தப் பணிகளில் ஈடுபடுபவர்களை அச்சுறுத்தும் நோக்கில் பொலிஸார் அதிகளவில் அங்கு குவிக்கப்பட்டனர். அவர்கள் அங்கு மாவீரர் நாளுக்கான ஆயத்தங்களை செய்தவர்களைப் படங்கள், வீடியோக்கள் எடுத்துள்ளனர்.

இளைஞர்களை அச்சுறுத்தும் நோக்கிலேயே பொலிஸார் இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். எனினும் அவற்றை சட்டைசெய்யாது இளைஞர்கள் தங்கள் பணிகளை முன்னெடுத்துச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)



## தேச விடுதலைக்காக உருகிப்போனவையளை, அஞ்சலிப்போம்

இண்டைக்குப் பிரார்த்தனை நாள். தியாகத் திருநாள். கிட்டத் தட்ட ஒரு தைப்பொங்கலைக் கொண்டாடுற மாதிரி இதுவும் தமிழருக்கு ஒரு முக்கியமான நாள். தியாகத்துக்கு இலக்கணம் வகுத்த தினம். அவையள் செய்த தியாகத்தைப் பற்றி நினைக்கிற நாள். தனக்கென்று அவையள் உயிரைத் தியாகம் பண்ணேல்லை. மற்றவையள் மானத்தோடையும், சுயமரியாதையோடையும் வாழ வேணுமெண்டு தாங்கள் மெழுகு வத்தியைப் போல உருகிப் போனவை. அவையளைத் தான் இண்டைக்கு நினைவுகூரப்போறம்.

இது ஒரு ஆன்மசாந்திப் பிரார்த்தனை. ஒருத்தரும் இண்டைக்கு அழப்பிடாது. பிரார்த்தனைதான் முக்கியம். அதுவும் கூட்டுப்பிரார்த்தனையா இருக்கிற மாதிரிப் பாத்துக் கொள்ள வேணும். எல்லாரும் ஒண்டாச் சேந்து ஒரு மனதோடை அவையள் ஆன்மா சாந்தி பெறவும் அவையள் என்னத்தை நினைச்சுக் கொண்டு உயிரை விட்டினமோ அந்த எண்ணம் ஈடேற வேணும் எண்டு இயற்கையையும், இறையையும் வேண்டிப் பிரார்த்திக்க வேண்டிய நாள்.

இதிலை இரண்டு கருத்து இருக்கப்பிடாது. இரண்டு பிரிவும் இருக்கப்பிடாது. மனோகரன் கேட்டுக் கொண்ட மாதிரி அரசியலும் இதுக்கை வேண்டாம். அரசியல் எண்டு வரேக்கைதான் அது எங்களைச் சிக்கல்படுத்தும். மாசு படுத்தும். கொச்சைப் படுத்தும். எங்களையெல்லாம் கேவலப்படுத்திப் போடும்.

மாவீரர்கள் மாண்பு கொண்டவை. ஒரு இலக்கை நோக்கிப் போனவை. அவைக்கு அதுக்கு முன்னாலை வேறை ஒண்டும் பெரிசாத் தெரியேல்லை. எதிரியை அவை வேணுமெண்டு தோற்றுவிக்கேல்லை. மறுக்கப்பட்ட உரிமையைக் கேக்கப் போன ஒவ்வொரு முறையும் ஏமாத்தப்பட்டினம். அவை போராளியள். தங்கடை உரிமையைக் கேட்டுப் போராடின போராளியள். ஏமாத்தினவன் எதிரியானான். ஆயுதத்தாலை அடக்கலாம் எண்டதுக்கு அவன் எல்லா அநீதி வழிகளையும் கையாண்டான். போர் எண்ட நடைமுறையிலை அவன் செய்தது இனப்படுகொலை. வாழ வேண்டிய ஆக்கள் லட்சத்துக்கு மேலை காணாமல் போட்டினம். கருகிப்போன மனத்தோடை நாங்கள் தான் மிச்சமாக் கிடக்கிறம்.

நேர்மையாப் போராடின காலமெல்லாம் எதிரி தோற்றதாத் தான் வரலாறு இருக்கு. ஒவ்வொரு முனையிலையும் அவன் தோற்றுப் போனான். தோற்றுப் போனவனுக்கு தர்மம் என்ன தாற்பரியம் என்ன? குறுக்கு வழிதான் அவனுக்குத் தெரிஞ்ச வழியாக் கிடந்திது. அடிச்சான் கெமிக்கலை. பூச்சி புழுவைக் கொல்லுறமாதிரிக் கொண்டு குவிச்சவன் எங்கடை மாவீரர் இல்லங்களையும் உழுதுபோட்டான். அவங்கள் எவ்வளவு மட்டமானவங்கள் பாருங்கோ!

இனத்தையும், அதின்ரை வரலாறையும் அழிக்க அவன் எத்தினை வழிகளை எல்லாம் காட்டுறான் எண்டதைப் பாத்தும் நாம் ஒற்றுமைப்படேல்லை எண்டால் எப்ப ஒற்றுமையா, ஒண்டா நிண்டு கொண்டு ஒரு குரலிலை “எங்களுக்கு உரிமை வேணும்” எண்டு கத்தப் போறம்? ஒரு குரலிலை கத்தாட்டி எதிரி பயப்பிட மாட்டான். எண்டு விடிவாத் தெரிஞ்சு கொள்ளுங்கோ. ஒற்றுமையா நிண்ட இடங்களிலைதான் இன விடுதலை சாத்தியமானது. தேச விடுதலை கிடைச்சது.

ஒரு இனத்தின்ரை விடுதலை எண்டது, ஒரு தேச விடுதலை எண்டது ஒரு ஆளின்ரை கையிலை இல்லை. ஒரு குழுவின்ரை கையிலை இல்லை. ஒட்டு மொத்தச் சமூகத்தின்ரை கையிலை உள்ள பொறுப்பு. இந்தப் பொறுப்பை உணர்ந்தால் கன்னை பிரிச்சு அடிபடமாட்டம். காசுக்கு விலை போக மாட்டம். காட்டிக் குடுத்து வயிறு வளக்க மாட்டம். காயிதத்திலை கப்பல் விடவும் மாட்டம்.

எல்லாரையும் அணைச்சும், இணைச்சும் கொண்டு போறதுக்கு ஒரு தலைமை வேணும். அததான் இப்ப எங்களிட்டை இல்லாத குறை. முந்தி வந்த மாதிரி தலைமை தான் வரவேணும். அது வரும். அதுவும் சுயம்பாத் தோன்றிவரும். அந்தத் தலைமையிட்டை எங்களிட்டை உள்ள ஒவ்வொருவரையும் பொறுப்புக் குடுப்பம். தேசத்தின்ரை விடுதலையையும் பொறுப்புக் குடுப்பம். அவன்ரை வழி போவம். இந்தப் பயணம் நிச்சயம் வெற்றி தரும். இதுதான் இந்த மாவீரர் தினத்திலை விநாசியின்ரை பிரார்த்தனை

வில்லங்கப்படாமை வெல்லுவம் இனச் சுதந்திரத்தை! தேச விடுதலையை!

- வில்லங்கம் விநாசி

## இரு சடலங்கள் மீட்பு

மாத்தறை, நவ. 27

இனந்தெரியாத குழுவால் கொல்லப்பட்டனர் என சந்தேகிக்கப்படும் இரு பெண்களின் சடலங்களை மாத்தறைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மாத்தறை - நவிமான பகுதியில் வீடு ஒன்றில் இருந்து இருவரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

சம்பவம் இடம்பெற்ற வீட்டு உரிமையாளரின் மனைவியும், அவரின் தாயாருமே கொலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மாத்தறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச)

## சொந்தக் காலில் நிற்போம்

### மகிந்தவுக்கு அமைச்சர் அழைப்பு



கொழும்பு, நவ. 27

“பதவிகளை எதிர்பார்க்காமல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றியைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் மகிந்த ராஜபக்ச கைகோக்க வேண்டும்.”

-இப்படித் தெரிவித்திருக்கிறார் அமைச்சர் விஜித் விஜேமுனி சொய்சா.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒன்று சேர்வது தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சி முன்வைத்துள்ள நிபந்தனை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியுடன் இணைந்து பயணிப்பதில் எமக்கு எந்தவித சங்கடமும் இல்லை. எமக்கு இணைந்து செயற்படுவதற்கான ஒரு பொன்னான காலம் உருவாகியுள்ளது. நாம் இணைந்தால், எமது சொந்தக் காலில் நிற்கலாம்.

முதலில் நாம் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இணைந்து வெற்றி கொள்வோம். பின்னர் பதவிகள், அமைச்சுக்கள் குறித்து பேச்சு நடத்தலாம். இது என்னுடைய தனிப்பட்ட கருத்து என்றும் அமைச்சர் இதன்போது சொன்னார். (ச)

## சமாதான நீதிவான்கள் பதவியேற்பு

யாழ்ப்பாணம் , நவ.27

கைதடி மேற்கைச் சேர்ந்த மன்னார் மேல் நீதிமன்ற உத்தியோகத்தர் சி.வடிவேற்கரசன் மற்றும் யாழ். மேல் நீதிமன்ற உத்தியோகத்தர் திருமதி. மீரா வடிவேற்கரசன் ஆகியோர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக கடந்த புதன் கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (அ)




## பிள்ளையானும் கருணாவும் ஒட்டவே ஒட்டார்கள்!

முல்லைத்தீவு, நவ.27

கருணா தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியும், பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் உள்ளூராட்சித் தேர்தலில் இணைந்து போட்டியிடப்போவதில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு எட்டப்படாத நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் செயலாளர் வி. கமலதாஸ் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இணைந்து செயற்படுவது தொடர்பில் தமிழர்ஐக்கிய சுதந்திர முன்னணி ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி வருகின்றது. இந்த நிலையில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அதன் தலைவர் பிள்ளையானை தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் செயலாளர் வி.கமலதாஸ் சிறைச்சாலையில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவித்த கமலதாஸ், “தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன் எந்த வொரு கட்சியினருடனும் பேச்சுவார்த்தைக்குத் தயாராகவுள்ளதாக அண்மையில் தெரிவித்திருந்தார். இதைத் தொடர்ந்து பலரின் எதிர்பார்ப்புக்கு மத்தியில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரைச் சிறையில் சென்று சந்தித்தோம்.

இதன்போது உள்ளூராட்சித் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் பேசப்பட்ட விடயங்களில் இணக்கப்பாடுகள் எட்டப்படவில்லை. இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடுவதில்லை என்றும், இருப்பினும் இரு கட்சிகளுக்கு இடையில் நல்லெண்ணத்தை பேணிக்கொண்டு செயற்படுவதெனவும் முடிவு எட்டப்பட்டுள்ளது” என்று தெரிவித்தார்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
திங்கள். 27 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

# மாண்டவீரர் கனவு பலிக்கும்

இன்று மாவீரர் நாள்

தமிழீழத் தாய்நாட்டின் விடிவுக்காகத் தமது இன்னுயிரை ஈகம் செய்து, எமது இதயமெல்லாம் நிறைந்து நிற்கும் எம்முயிர் வீரர்களை நாம் நினைவு கூர்ந்து கௌரவிக்கும் புனித நாள்.

ஆண்டாண்டு காலமாக அந்நிய ஆதிக்கப் பிடிக்குள் அடங்கிக் கிடந்த எமது தேசத்தை, ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணியாத அடங்கா மண்ணாக மாற்றிவிட்ட எமது வீர மறவர்களைப் பூசித்து வணங்கும் திருநாள்.

எமது தேசம் விடுதலை பெற்று, எமது மக்கள் சுதந்திரமாக, தன்மானத்துடன் வாழ வேண்டும் என்ற சத்திய இலட்சியத்துக்காக மடிந்த எமது மான வீரர்களை எமது நெஞ்சப் பசுமையில் நிறுத்திக் கொள்ளும் தேசிய நாள்.

எமது மாவீரர்கள் இந்த மண்ணை ஆழமாக நேசித்தார்கள். தாயக விடுதலைக்காகத் தமது கண்களைத் திறந்த கணம் முதல் நிரந்தரமாக மூடிய கணம் வரை அவர்கள் புரிந்த தியாகங்கள் உலக வரலாற்றில் ஒப்பற்றவை.

எந்த ஒரு தேசத்திலும் எந்த ஒரு காலத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புக்களை எமது மண்ணிலே எமது மண்ணுக்காக எமது மாவீரர்கள் புரிந்திருக்கிறார்கள்.

இந்த மண்ணிலேதான் எமது மாவீரர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தார்கள். இந்த மண்ணிலேதான் அவர்களது பாதச்சுவடுகள் பதிந்திருக்கின்றன. அவர்களது மூச்சுக்காற்றும் கலந்திருக்கிறது. இந்த மண்ணிலேதான் எமது இனம் காலாதிகாலமாக, கொப்பாட்டன், பாட்டன் என தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிறது.

எமது இனச் சரித்திரம் நிலைபெற்ற இந்த மண்ணை ஆழமாகக் காதலித்து, இந்த மண்ணுக்காகவே மடிந்து, இந்த மண்ணின் மடியிலேயே எமது மாவீரர்கள் படுத்துறங்குகிறார்கள். அவர்கள் பள்ளி கொள்ளும் இந்த மண் எமக்கேயுரித்தான மண். எமக்கே சொந்தமான மண். இந்த வரலாற்று மண்ணை ஆக்கிரமித்து, அடக்கியாள சிங்களம் திமிர் கொண்டு நிற்கிறது. தீராத ஆசை கொண்டு நிற்கிறது.

மனித துயரங்களெல்லாம் அடங்காத, அருவருப்பான ஆசைகளிலிருந்தே பிறப்பெடுக்கின்றன. ஆசைகள் எல்லாம் அறியாமையிலிருந்தே தோற்றம் கொள்கின்றன. ஆசையின் பிடியிலிருந்து மீட்சி பெறாதவரை சோகத்தின் சுமையிலிருந்தும் விடுபட முடியாது.

சிங்களத்தின் கனவுகள் நிச்சயம் கலையும். எமது மாவீரர் கண்ட கனவு ஒருநாள் நனவாகும். இது திண்ணம்.

–மேதகு.வே.பிரபாகரன்(2008 நவம்பர் 27)

“உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்”



# மாவீரர் நாளால் அரசுக்கே நற்பெயர்

## இதுவே அரசியல் கட்சிகளின் திட்டம்

கிளிநொச்சி, நவ.27

“தற்போது மாவீரர் நாளை அரசியல் கட்சிகள் கூறு போட்டுக்கொண்டு நடத்துவது என்பது அரசுக்கு நற்பெயரை ஏற்படுத்தவே” என காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் கிளிநொச்சி தலைவி கலாரஞ்சினி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“அரசுக்குச் சர்வதேச ரீதியில் நற்பெயரை ஏற்படுத்துவதற்கே போட்டி போட்டுக்கொண்டு மாவீரர் நாளை அரசியல் கட்சிகள் நடத்துகின்றன. தங்களுடைய பிள்ளைகளை நாட்டுக்காக கொடுத்த பல தாய்மார்கள் விளக்கேற்ற முடியாத நிலையில் ஓலைக் குடிசைகளில், ஒருவேளை உணவுக்காக, ஒரு வேளை தேநீருக்காக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அத்தகைய தாய்மாரைக் கவனிக்காது மாவீரர் நாளை கூறுபோட்டுக்கொண்டு நடத்துகின்றனர்.

2009 க்கு முன் எவ்வாறு மாவீரர் நாள் நடத்தப்பட்டதோ, எந்தளவுக்கு புனிதத் தன்மையோடு அனுஷ்டிக்கப்பட்டதோ அந்த நிலைமை தற்போது இல்லை. தலைவா பிரபாகரனின் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கோ, மாவீரர் நாளை நடத்துவதற்கோ நல்லாட்சி அரசு அனுமதி வழங்கியிருக்கிறது என்றால் அது சர்வதேசத்துக்கு இங்கு நல்லாட்சி நடக்கிறது என்பதனைக் காட்டுவதற்கே” எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# 26 பேர் கைது!

## சட்டவிரோதமாக கனடா செல்ல முயன்றவர்களாம்



புத்தளம், நவ. 27

சட்டவிரோதமாக கனடா செல்ல முற்பட்ட 26 பேரை புத்தளம் பாதுகாப்பு பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரிகள் நேற்று கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம்- தில்லையடி பகுதியில் திருமண மண்டபம் ஒன்றில் சந்தேகத்திற்கிடமான நபர்கள் தங்கியிருக்கின்றனர் எனக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுடன் பெண்ணொருவரும் இருந்துள்ளார் என்றும் ஆனால் அவர் தலைமறைவாகி விட்டார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ச)



# மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு

கிளிநொச்சி, நவ.27

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் அமைந்துள்ள அவர்களது கட்சி மாவட்ட அலுவலகத்தில் மாவீரர்களின் பெற்றோர் நேற்றுக் கௌரவிக்கப்பட்டனர். கட்சியின் கிளிநொச்சி இணைப்பாளர் விமல் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவீரர்களின் பொது திருவுருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் தெரிவுசெய்யப்பட்ட சுமார் நூற்றிப் பத்து மாவீரர் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதியும் வழங்கி வைக்கப்பட்டது. (அ)

# முல்லையில் 10 மில்லியனில் உள்ளக விளையாட்டு அரங்கு

முல்லைத்தீவு, நவ.27

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளக விளையாட்டு அரங்கமொன்றை அமைக்க வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் 10 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாக நகர விளையாட்டு மைதானத்தின் அருகாக, விளையாட்டு திணைக்களத்துக்கு பிரதேச செயலகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுக் கையளிக்கபட்ட காணியில், பூப்பந்து மற்றும் கரப்பந்து, கபடி, கராத்தே, குத்துச் சண்டை இன்னும் பல போட்டிகள் நடத்த கூடியதாகவும் பயிற்சியினை மேற்கொள்ள கூடியதாகவும் இந்த உள்ளக விளையாட்டு அரங்கம் அமையவுள்ளது.

கடந்த காலத்தில் 2013 ஆம் ஆண்டும் 30 மில்லியன் ரூபா உள்ளக விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு மத்திய அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டும், பின்னர் சில இடையூறுகளால் குறித்த உள்ளக அரங்கம் மன்னாரில் அமைக்கப்பட்டிருந்தது.

தற்சமயம் கேப்பாபிலவு மற்றும் ஒட்டிசுட்டான் இராணுவ முகாமில் உள்ள உள்ளக அரங்கினையே பெரும்பாலும் மாணவர்களும், ஏனைய விளையாட்டு வீரர்களும் பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)




# 5 வருட வரி அனுமதியற்ற வாகனங்களுக்கு தடை

கொழும்பு, நவ.27

கடந்த 5 வருடங்களாக வாகன வரி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காத வாகனங்களுக்கு தடை விதிக்கப்படும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரி ஜெகத் சந்திரசிறி தெரிவித்தார்.

“இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

வாகன வரிஅனுமதிப்பத்திரத்தை இரண்டு ஆண்டுகளுக்கு மேல்புதுப்பிக்காதுவிடின் தடை செய்யப்படும் நடைமுறை தற்போது பின்பற்றப் படுகிறது.

எனினும் தண்டம் அறவீடு செய்வதன் ஊடாக அவற்றுக்கு அனுமதி புதுப்பிக்கப்படுகின்றன.

இந்த நிலையில், புதிதாக வரும் நடைமுறைக்கு அமைவாக 5 ஆண்டுகள் வரி அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படாத வாகனங்களுக்கு அதனை ஒருபோதும் புதுப்பிக்க முடியாது.

அவ்வாறான வாகனங்களைப் பயன்படுத்த முடியாமல் தடைவிதிக்கப்படும். மோட்டார்போக்குவரத்து திணைக்களத்தின் மாகாண அலுவலகங்கள் மற்றும் மாகாண சபைகளிடமிருந்து கிடைத்த அறிக்கைகளின் பிரகாரம் பல வாகனங்களுக்கு 10 தொடக்கம் 15 ஆண்டுகளாக அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

வாகனங்களுக்கான புகைப் பரிசோதனை தோல்வியடைந்தவர்களே இவ்வாறு அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காது உள்ளனர்.

புதிய ஒழுங்குமுறை நடைமுறைக்கு வருவதற்கு முன்னதாக, தங்கள் வரி உரிமங்களை புதுப்பிக்காதவர்கள் உடனடியாக அதைச் செய்ய வேண்டும். இல்லையெனில் வாகனத்துக்கான உரிமம் இரத்துச் செய்யப்படும்” என்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரி ஜெகத் சந்திரசிறி தெரிவித்தார். (அ)

# 2 கோடியே 80 இலட்சம் கைபேசிகள் பாவனையில்



கொழும்பு, நவ. 27

நாட்டில் இவ்வருடத்தின் முதல் 8 மாத காலத்தில் 2 கோடியே 80 இலட்சத்துக்கும் அதிகமான கைபேசிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று நிதியமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த வருடத்தை விட இது 13.8 சதவீதம் அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இணையத்தளத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 55 இலட்சமாக அதிகரித்துள்ளது. இது கடந்த வருடங்களை விட 26.5 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

# இன்று நாளும் கோளும்

27.11.2017 திங்கட்கிழமை ஏவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 11 ஆம் நாள்

அட்டமி மு.ப. 06.23 | சதயம் பி.ப. 01.12 மணி வரை | மரணயோகம்

இராகுகாலம் 07.30 - 09.00 | சுபநேரம் 06.15 - 07.15 | எமகண்டம் 10.30 - 12.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நன்மை | உதவி | நலம் | நற்செயல் | சிந்தனை | சிக்கல் | இலாபம் | பாசம் | சினம் | விருத்தி | பாராட்டு | ஜெயம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "முதல் மாவீரர் நாள் - சில நினைவுகள்"

நா.யோகேந்திரநாதன்



*1989 நவம்பர் -27*

அது வன்னி மண் தன்னை ஒரு மகத்தான புனிதத்தால் அலங்கரித்துக் கொண்ட நாள். கோணாவில் பாடசாலை மைதானமெங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் காற்றில் பறக்கின்றன. அலங்கார மேடை. அதன் பின் திரையில் பொறிக்கப்பட்ட புலிச்சின்னம். அதன் கீழே மாவீரர் தினம் 1989 எனப் பொறிக்கப்பட்ட பதாதை. ஒரு புனிதம் அந்த மைதானத்தில் மட்டுமல்ல அதன் சுற்றாடலிலும் கோலோச்சி வலம் வருகிறது.

ஆம். அங்கே முதல் மாவீரர் தினத்திற்கான தயாரிப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளிலுள்ள அத்தனை வாடகைக் கார்களும், வான்களும் ஒவ்வொன்றாக வந்து சேர்கின்றன. சகல மின்பிறப்பாக்கிகளும் கொண்டு வந்து இறக்கப்படுகின்றன. எல்லா ஒலிபரப்பிகளும் வந்து குவிந்து விட்டன. அத்தனை வாகனங்களுக்கும், அத்தனை ஒலி பெருக்கிகளுக்கும், அத்தனை மின்பிறப்பாக்கிகளுக்கும் அங்கு என்ன தான் தேவை வந்து விட்டது? உண்மையாகவே எல்லாமே பாவிக்க வேண்டிய அளவுக்கு தேவை எதுவுமே இல்லை.

சிலவே போதுமானவை. அங்கே ஒரு தந்திரோபாயம். ஒன்றிரண்டு வாகனங்கள் மின்பிறப்பாக்கிகள், ஒலிபெருக்கிகள் மட்டும் அந்த மைதானத்திற்குள் கொண்டுவரப்பட்டால் அதன் உரிமையாளர்கள் அடுத்த நாளே புலியென்று நையப்புடைக்கப்படலாம். கைது செய்யப்படலாம். சித்திரவதைக்கு உட்படுத்தப்படலாம், கழுத்து வெட்டப்பட்டு வீதியிலும் வீசப்படலாம்!

அனைவருமே மாவீரர் தின நிகழ்வுக்கு தங்கள் வாகனங்களையும் சாதனங்களையும் கொண்டு வந்து விட்டால் எவரைப் பலியாக்குவது? எவரைப் பிடிப்பது? எவரை அடிப்பது? எவரைக் கழுத்தறுப்பது?

ஏறக்குறைய இரண்டு மணிக்கே வீதிகளில் நெடுந்தூரத்திற்கு வாகனங்கள் அணி வந்து நிற்கின்றன. ஒலி பெருக்கிகள் கார்களில் கட்டப்பட்டு விட்டன. மின் பிறப்பாக்கிகள் மேடையின் பின் அடுக்கப்பட்டு விட்டன.

அன்று காலையிலே இப்படி ஒரு விழா நடக்கவிருப்பதாக மக்களுக்கு வாய்மொழியாக அறிவிக்கப்பட்ட போதிலும் இரண்டு மூன்று மணிக்கே கால் நடையாகவும் சைக்கிள்களிலும் மக்கள் பெரும் திரளாக கூட ஆரம்பித்துவிட்டனர்.

நாலு மைல் தொலைவில் உருத்திரபுரத்தில் இந்தியப்படை முகாம். எதிர்ப்புறத்தில் ஆறு மைல் தொலைவில் அக்கராயனில் இந்தியப் படை முகாம். இன்னொரு புறத்தில் கிளிநொச்சி நகரில் ஆறு மைல் தொலைவில் இந்தியப்படை முகாம். பக்கத்தில் ஈ.என்.டி.எல்.எவ் முகாமும், மூன்று பக்கங்களிலும் ஆபத்து நாக்கை நீட்டிக்கொண்டு நிற்க நடுவே மாவீரர் நாள் விழா மெல்ல மெல்லப் பிரமாண்டமடைகிறது. இந்தியப்படையோ, ஈ.என்.டி.எல்.எவ் குழுவோ வந்தால், அவர்களை எதிர்கொண்டு விரட்டி அடிக்கத் தயாராக விடுதலைப் புலிகளின் படையணி மறைவிடங்களில் காத்திருக்கிறது என்பதை மக்கள் எவரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனினும் மாவீரர்களின் மகத்துவம் அவர்களை துணிச்சலுடன் அணிதிரள வைக்கிறது.

மாலையானதும் மைதானமெங்கும் மின்சார ஒளி வெள்ளம் பாய்ந்தது. விழா மாவீரர் வணக்கத்துடன் ஆரம்பமானது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பலர் கொல்லப்பட்டுவிட்டனர். இன்னும் சிலர் காடுகளுக்குள் போய் விட்டனர். இன்னும் ஒரு பகுதியினர் கொழும்புக்குத் தப்பியோடி விட்டனர். இப்படியான நெருக்கடியான நிலையிலும் வன்னி மண்ணிலேயே தலை மறைவாக இருந்து கொண்டு இயக்கப் பணிகளுக்குத் தோள்கொடுத்து வந்த ஆதரவாளர்களின் ஒத்துழைப்பில் இப்பிரமாண்டமான விழா அரங்கேறுகிறது.

மைதானம் நிறைந்த மக்களின் வெள்ளம். உணர்வு பூர்வமான ஒரு சூழல் எங்கும் பரவி ஒரு உன்னதத்தைச் சொரிய வைக்கிறது. அங்கே மாவீரர் துயிலும் இல்லம் இல்லை. ஆனால், மாவீரர்களின் தியாகத்தால் விம்மிப் புடைத்த இதயங்கள் இருந்தன. அங்கே தாயகத்துக்காக உயிர் தந்த தியாகிகளின் கல்லறைகள் இல்லை. ஆனால், அவர்கள் ஒவ்வொருவரையும் காலம் காலமாக நெஞ்சில் நிறுத்தும் நினைவுகள் இருந்தன. நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன. மாவீரர் நினைவாக பாடசாலை மாணவ மாணவிகளின் ஆடல்கள் பாடல்கள் அரங்கேறுகின்றன.

அடுத்து 'வானம் பூமியானது. பூமி வானமானது...' என்ற ஆசிரியர் கணேசனின் பாடல் பாடகர் சாந்தனின் குரலில் செவிகளை நிறைக்கிறது. அடுத்து இந்தியப்படையின் கொடுமைகளை, தேசத்துரோகிகளின் நயவஞ்சகத்தை விளக்கும் சில உரையாடல்கள், தாளலயம், வில்லுப்பாட்டு என நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. இறுதி நிகழ்ச்சியாக நா.யோகேந்திரநாதனின் நாடகம் மேடையேற்றப்படுகிறது. இதில் சிங்கள அரசு எவ்வாறு இந்தியாவைத் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துகிறது என்பதையும், இந்தியப் படை தோற்கடிக்கப்பட்டு விரட்டப்படும் என்பதையும், தேசத்துரோகிகளும் துரத்தப்படுவார்கள் என்பதையும் வெளிப்படுத்திய ஒரு நவீன பாணியில் அமைந்த படைப்பாக விளங்கியது.

மாவீரர்களை நினைவு கூர்ந்து நடத்தப்பட்ட இந்த முதல் நினைவு விழா, பிரமாண்டமான முறையில் அமைந்திருந்ததோடு மக்களுக்கு உணர்வூட்டி எழுச்சிபெற வைத்த ஒரு அரங்காக அமைந்தது. மறுநாள் கிளிநொச்சி நகரில் சிலரை பிடித்து வைத்து "நீ நேற்று கோணாவில் போனனீ தானே?" என்று கேட்டு கோழைத்தனமாக அடித்து துன்புறுத்தினர். ஒரு சில வாரங்களிலே அவர்கள் இந்தியப்படையினரின் பின்னே துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓடியதுதான் வரலாறு. மூன்று புறமும் இந்தியப் படையும் தேசத்துரோகிகளும் சூழ்ந்து நிற்க, எந்தக் கொடுமைகளையும் அவர்கள் எந்த நேரத்திலும் செய்யலாம் என்ற நிலை நிலவ இப்படிப் பெருந்தொகையான மக்கள் எப்படி இந்த நிகழ்வில் அணிதிரள முடிந்தது? இவ்வளவு பேருக்கும் துணிச்சல் எப்படி வந்தது? இங்கு தான் மக்கள் சக்தி என்ற அற்புதம் முளைவிட்டு கிளை பரப்பி பெரும் விருட்சமாகிறது.

மக்கள் உணர்வு கொண்டு எழுச்சி பெறும் போது அதை எந்தச் சக்தியாலும் அச்சுறுத்த முடியாது, எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது, எந்த சக்தியாலும் அழித்துவிட முடியாது. இது காலாதி காலமாக உலகம் கண்ட யதார்த்தம். இந்தியப் படையின் அச்சுறுத்தல்களோ மிரட்டல்களோ தியாகி திலீபனின் உண்ணா விரதத்தில் பல்லாயிரம் பேர் கலந்து கொள்வதைத் தடுக்க முடியவில்லை. வெஞ்சினம் கொண்டு விடுதலைக்காக உயிரையும் கொடுப்போம் என்று சபதமிட்டதை தடுத்து விட முடியவில்லை.

இவ்வாறே கோணாவில் முதல் மாவீரர் தினத்தில் பல்லாயிரம் மக்கள் கலந்து கொண்டு உணர்வெழுச்சியில் சங்கமமானதை எந்தக் கொடியவர்களாலும் தடுக்க முடியவில்லை.

இது மட்டுமல்ல, தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் இறுதி நிகழ்வுகள் கிளிநொச்சியில் இடம்பெற்றபோது சிறீலங்கா வான் படையின் கிபிர் மிக் விமானங்கள் தொடர்ந்து வட்டமிட்டன. தாழப்பறந்து பயங்கர ஒலி எழுப்பி மிரட்டின. ஆனால் ஒரு குழந்தை கூட அந்த இடத்தை விட்டு அகலவில்லை. எந்த ஒருவரும் அஞ்சி ஓடவில்லை.

ஆம், வீரச்சாவுகள் எங்கள் மக்களை துயரத்தில் தோய வைக்கின்றன. ஆனால், துவண்டு போக வைக்கவில்லை. துணிச்சல் ஊட்டுகின்றன. இதயங்களுக்கு உரமூட்டி எழுச்சி பெற வைக்கின்றன. அவை அச்சத்தைத் தூக்கியெறிந்து ஆக்கிரோசத்தை உருவாக்கின்றன. மக்கள் இதய பூர்வமாக எழுச்சி பெறும்போது அவர்கள் எந்தப் பயங்கரத்துக்கும் துணிச்சலாக முகம் கொடுப்பார்கள் என்பதற்கு வன்னியில் இடம் பெற்ற முதல் மாவீரர் தினம் ஒரு நல்ல உதாரணமாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் வாரத்தில் ‘உரை’ எதுவும் வேண்டாம்!

கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ். ஊடக மையத்தில் “மாவீரர்களை மதிப்போம்” என்ற கருத்தின் அடிப்படையில் ஒரு ஊடகச் சந்திப்பை புலிகளின் மத்திய குழு உறுப்பினராக ஆரம்ப காலங்களின் அங்கம் வகித்தவரும் ஒரு மாவீரரின் தந்தையுமான ‘காக்கா அண்ணா’ என்றழைக்கப்படும் மனோகரர் நடத்தியிருந்தார்.

மிகவும் இக்கட்டான சூழலிலும், மாவீரர் தினத்தைத் தொடர்ந்து அனுட்டித்துவரும் அனைவருக்கும் அந்த சந்திப்பில் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

அத்துடன் இம்முறையும் மாவீரர் தினத்தைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை முன்நின்று நடத்துகின்றவர்கள் பற்றிக் குறிப்பிட்டு மிகவும் உருக்கமான வேண்டுகோள் ஒன்றினை முன்வைத்தார். அவரது அந்த வேண்டுகோளின் பிரதான பகுதியை கீழ் கண்டவாறு பதிவு படுத்தியிருக்கிறோம்.

- இந்த நிகழ்வானது - எந்த ஓர் அரசியல் கட்சியினதும் அல்லது அரசியல்வாதியினதும் தேர்தல் தேவைக்கு எவ் விதத்திலும் பயன்படுத்தப்படக்கூடாது என நாம் எதிர் பார்க்கின்றோம்.

- 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் எந்த உணர்வுடன் துயிலுமில்ல மண்ணை மிதித்தோமோ, எவ்வாறான மனநிலையில் வெளியில் வந்தோமோ அந்த மனோ நிலை இப்போதும் பேணப்படவேண்டும் என வேண்டுகின்றோம்.

குறிப்பாக - இதற்கு ஊடகவியலாளர்களின் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கிறோம். இந்த வணக்க உணர்வு நிலைக்கு இடையூறு ஏற்படும் வகையில் - மாவீரர் நிகழ்வுச் சூழலில் வைத்து - அரசியல் விவகாரங்கள் தொடர்பாக செவ்விகள் எடுப்பதனைத் தவிர்க்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

- பிரதான சுடரினை ஒரு மாவீரரின் மனைவியோ, கணவரோ, பெற்றோரோ அல்லது பிள்ளைகளோ மட்டுமே ஏற்ற வேண்டும்.

- சமரசம் உலாவிய இடமாக துயிலும் இல்லங்கள் திகழ்கின்றன. பிரிகேடியர் முதல் காவல்துறை, எல்லைப் படை, துணைப்படை, போருதவிப்படை வீரர்கள் என சகலரையும் சமமாகவே தன்னுள் ஏற்றுக்கொண்டது இந்த மண். அந்த நிலை தொடர்ந்து பேணப்பட வேண்டும். முதன்மைச் சுடர் ஏற்றுபவரைத் தெரிவு செய்யும் போது மாவீரர் பதவி நிலைகளைக் கணக்கிலெடுக்கத் தேவையில்லை என்பது எமது தாழ்மையான அபிப்பிராயம்.

- மாவீரர் நாள் நிகழ்வுக்கு முன்னதாகவோ, பின்னதாகவோ எந்த ஒருவரது உரையும் தேவையற்றது. மாவீரர் நாள் நிகழ்வுக்கு முன்னதாகவோ, பின்னதாகவோ எந்த ஓர் அரசியல் கட்சிக்கும் அல்லது அரசியல்வாதிக்கும் சார்பாகவோ அல்லது எதிராகவோ பிரசாரங்களை வழங்க வேண்டாம். நிகழ்வு தொடர்பான அறிவுறுத்தல்களை ஒலிபெருக்கி ஊடாக வழங்குவோரும் இந்த வழிமுறையைப் பின்பற்றுவதே சிறந்தது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து காக்கா அண்ணனுடன் தொடர்பு கொண்டோம்.



## ‘எதிரொலி’க்கு காக்கா அண்ணன் சிறப்புச் செவ்வி

கேள்வி – இயக்கத்தின் விதி முறைகள் நடைமுறையிலிருந்தபோது அவர்கள் குறிப்பின்படி முதன்மைச் சுடரை ஒரு பொதுவானவர் ஏற்றத் தொடர்ந்து மாவீரர் உறவுகள் தாங்கள் சார்ந்தவர்களுக்குரிய சுடரை ஏற்றி நினைவு கூரலாம் என்ற வழக்கமே இருந்து வந்தது. ஆனால் தங்கள் கூற்றப்படி அது மாறுபாடுகிறது. ஏன்? இத்துடன் ஏன் போராளிகள் ஏற்றக் கூடாது என்றும் சொல்கிறீர்கள்?

பதில் - இயக்கம் இருந்தபோது அங்கே ஒரு கட்டுப் பாட்டுக்குள் நாம் அனைவரும் இருந்தோம். எனவே அந்தப் “பொதுவானவர் யார்?” என்று தெரிவதில் சிரமங்கள் இருக்கவில்லை. தற்போது பொதுவானவர் என்று யாரைத் தெரிவது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலைப்பாடுடன் இருக்கின்றனர். ஆனால் அன்றும், இன்றும், என்றும் மாறாது இருப்பவர்கள் மாவீரரின் உறவுகள். எனவே அவர்களே முதன்மைச் சுடரை ஏற்ற முழுமைத் தகுதி பெற்றவர்கள் என்று நான் எண்ணுகிறேன்.

அடுத்ததாகப் போராளிகள் பற்றிக் கேட்டீர்கள். எப் போது, “அவர் தலைமையை ஏற்று அவர் வழி போராடுவோம்” என்ற சத்தியத்தை உடைத்துக் கொண்டு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் பிரவேசித்தோமோ, அன்றே நாம் போராளிகள் என்ற தகமையை இழந்துவிட்டோம். நான்கூட ஒரு மாவீரரின் தந்தை என்ற உறவு நிலையிலிருந்துதான் இத்தினத்தை அனுட்டிக்க முனைகிறேனேயொழிய ஒரு போராளி என்ற நிலையிலிருந்து அல்ல என்றதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அத்துடன் சுதந்திரமாக எதையும் செய்வதற்கு நாம் இன்னும் அத்தகையதொரு சூழலுக்குள் வரவில்லை என்று எண்ணுகிறேன். அத்துடன் இத்தகையதொரு ஸ்திரமற்ற சூழலில் யாரையும் அடையாளப்படுத்த நான் விரும்பவில்லை.

கேள்வி – இனிவரும் காலத்தில் இந்த மாவீரர் தினத்தை அனுட்டிப்பதற்கு “மாவீரர் பணிக் குழு” ஒன்றை அமைப்பது பற்றிப் பேசி உள்ளீர்கள். அந்தப் பணிக் குழுவானது எப்படி? யார் வழிகாட்டலில் அமைக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

பதில் - எந்தெந்தத் துயிலும் இல்லங்களில் தமது உறவுகளின் உடலங்கள் விதைக்கப்பட்டதோ, அவரது உறவுகள் ஒன்று கூடி அந்தத் துயிலுமில்லத்துக்கான மாவீரர் பணிக் குழுவை அமைத்துக் கொள்ளலாம். அவர்கள் அந்தத் துயிலும் இல்லத்துக்கான பொறுப்புகளையும் ஏற்றெடுத்து அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அந்தத் துயிலுமில்லத்தை புனரமைக்கவோ அல்லது வேறுவிதமான வேலைகளைச் செய்ய விரும்புகிறவர்கள் அந்தந்தப் பணிக்குழுவுக்கு ஊடகத் தமது பணிகளை மேற்கொள்ளலாம்.

அப்படியே அனைத்துத் துயிலுமில்லங்களும் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டால் எந்த அரசியல் தலையீடும் இருக்காது. எந்த அரசியல்வாதியும் அதனூடாகத் தமது அரசியலைச் செய்யமாட்டார்.

கேள்வி – குறிப்பாக முஸ்லிம் மாவீரர்கள் பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். அதைப் பற்றிய மேலதிக விபரங்களைக் குறிப்பிட முடியுமா?

பதில் - பிரிபடாத தமிழ் தேசத்தினதும் அதன் இறையாண்மையினதும் அங்கீகாரம் என்பதுவே எமது போராட்டத்தின் அடிப்படையாகும். எமது இந்த பிறப்புரிமைக்காக - லெப்ரின்னற் ஜூனைதீன் (ஜோன்சன்) முதல் 43 முஸ்லீம் மாவீரர்கள், 1985 முதல் 1990 வரை வீரச் சாவடைந்துள்ளனர். 2000ஆம் ஆண்டுக்கு பின்னரும் இருவர் மாவீரர்களாகியுள்ளனர். எனவே முஸ்லீம் மாவீரர்களின் உறவுகளும் இந்த நாளில் கௌரவிக்கப்பட வேண்டும். கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் இரண்டு முஸ்லிம் போராளிளது உடலங்கள் விதைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒருவரது பெற்றோர் கிளிநொச்சி மாவட்டம் - இராமநாதபுரத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் முக்கியமாக அழைத்துக் கௌரவிக்கப்பட வேண்டும்.

கேள்வி – ஒவ்வொருவரும் தான்தான் தமிழர் தலைவர் என்றும் தலைவர் பிரபாகரனின் மறுவடிவம் என்றவாறும் பேசிக் கொண்டிருக்கிறார்களே? அது பற்றி..!

பதில் -தமிழ் தேசத்தைப் பொறுத்தவரை - ஒரே ஒரு பிரபாகரன் தான். அவரது நிலையில் யாரும் தம்மை வைத்துப் பார்ப்பதையோ, அல்லது அவராகத் தம்மைச் சித்தரிக்க முனைவதையோ எமது இனம் அனுமதிக்காது.

- இப்படிச் சொன்னார் காக்கா அண்ணன்.

இயக்கம் இருந்தபோது அங்கே ஒரு கட்டுப்பாட்டுக்குள் நாம் அனைவரும் இருந்தோம். எனவே அந்தப் “பொதுவானவர் யார்?” என்று தெரிவதில் சிரமங்கள் இருக்கவில்லை. தற்போது பொதுவானவர் என்று யாரைத் தெரிவது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலைப்பாடுடன் இருக்கின்றனர். ஆனால் அன்றும், இன்றும், என்றும் மாறாது இருப்பவர்கள் மாவீரரின் உறவுகள். எனவே அவர்களே முதன்மைச் சுடரை ஏற்ற முழுமைத் தகுதி பெற்றவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்தமற்ற ஆளணியால் சாதிப்பது முடியாத காரியம்

யாழ்ப்பாணம், நவ.27

”பொருத்தமற்ற ஆளணியை வைத்துக் கொண்டு, வடக்கு மாகாணத்தின் கல்வி நிலையை உயர்த்துவதென்பதும், ஆசிரிய பரம்பலைச் சீராக்கம் செய்வதென்பதும் எவராலும் முடியாத காரியம்” என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள 1093 பாடசாலைகளில் 1065 பாடசாலைகள் இயங்குகின்றன. வட மாகாணத்தில் உள்ள 12 வலயங்களிலும் 22 தேசிய பாடசாலைகளும், 06 தனியார் பாடசாலைகளும் உள்ளன. இவற்றுள் 105 1 ஏபி பாடசாலைகளும், 123 1 சீ பாடசாலைகளும், 315 வகை -2 பாடசாலைகளும், 460 வகை-3 பாடசாலைகளும் உள்ளன.

மாகாணப் பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 2 12 261. ஆசிரியர்களின் எண்ணிக்கை 15 123. இவர்களுள் பெண் ஆசிரியர்கள் 10998உம் ஆண் ஆசிரியர்கள் 4008உம் உள்ளனர். சராசரியாக 14 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் வடக்கு மாகாணத்தில் உள்ளனர். ஆனால் இந்த ஆசிரியர்களின் பாடத்துறை பொருத்தப்பாடு இன்மையால் பாட ரீதியாக இரண்டாயிரத்துக்கும் அதிகமான ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. அப்படியானால் இதனை சீர் செய்வது எப்படி?

முன்னைய காலங்களில் அழகியல் துறை சார்ந்த ஆசிரியர்கள் 1சீ பாடசாலைகளில் இரண்டு பாடசாலைகளுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் கடமை புரிந்தனர். தற்போது ஒரு பாடசாலையில் இரண்டுக்கு மேற்பட்ட ஆசிரியர்களும் கடமையில் உள்ளனர். இதைவிட திணைக்கள கடமையில் 500ற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் உள்ளனர். இவர்களோடு கடமை நிறைவேற்றும் பணியில் 1000ற்கும் அதிகமானவர்கள் உள்ளனர்.

இத்தகைய குழப்பமான தரவுகளோடு வடக்கு மாகாணத்தின் கல்வியை மேம்படுத்துவது எப்படி?

இதற்கான மாற்று வழிகள் பலவற்றை பல்நாட்டுக் கல்வி முறைகளுடன் ஒப்பீடு செய்து, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வைத்தது. அதனை எவரும் கருத்தில் கொள்ளவும் இல்லை. நடைமுறைப்படுத்த எண்ணவும் இல்லை. இதைவிட மத்திய அரசின் ஆசிரிய நியமனங்கள் பல எமது மாகாணத்திற்குப் பொருத்தமில்லாதனவாக இருக்கின்றன. உதாரணமாக வடக்கு மாகாணத்தில் பற்றாக்குறையாக உள்ள கணிதம், விஞ்ஞானம், ஆரம்பக்கல்வி, ஆங்கிலம், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் ஆகிய பாடங்களுக்கு இன்னும் பற்றாக்குறை உள்ளது.

தற்போது வடக்கு மாகாணத்தில் ஆசிரிய ஆளணியைச் சீராக்கம் செய்வதற்காக புதிய ஆசிரிய இடமாற்றக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை வடக்கு மாகாண சபையும் ஏற்றுள்ளது.

அதற்கு முன்னதாக ஆசிரிய ஆளணியின் உண்மைத்தன்மை வலயங்களில் பின்பற்றப்படுகின்றதா? பேணப்படுகின்றதா? என்பதனை உறுதி செய்யவேண்டும்.

சில ஆசிரியர்களின் நியமனவகை வேறு. கற்பிக்கும் பாடம் வேறு. அதிபர்களிடம் தகவல்கள் பெறப்படுகின்றபோது, ஆசிரியர்களால் வழங்கப்படும் தகவல்களே தரவுகளாக வலயங்கள் வெளிப்படுத்துகின்றன. இதில் எவ்வளவு பாரதூரமான தவறு இருப்பதென்பதனை எவரும் உணர்வதில்லை.

மாறாக எழுந்தமானமாக பொதுவாக ஆசிரியர்கள் என்ற பதத்தை மட்டும் பயன்படுத்தி வலயங்களுக்கு இடையேயான இடமாற்றங்கள் நிகழ்கின்றன. இதனால் சில பாடத்துறை சார்ந்த ஆசிரியர்கள் ஓரிரு இடங்களில் செறிந்துவிடும் நிலைமை உருவாகின்றது. இவற்றையெல்லாம் பார்க்கும் போது பல சிக்கலான நிலைமைகள் வடக்கு மாகாணத்தில் உள்ளன” என்றும் அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தொடர்ச்சிகள்

### வவுனியாவில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகநூலில் பதிவேற்றியிருந்தனர்.

இதையடுத்து விடுதியில் இருந்த சிங்கள மாணவர்கள் அவர்களுடன் முரண்பட்டனர். எனினும் அவர்களை விடுதி மேற்பார்வையாளர் சமரசம் செய்து வைத்தார். இதேநிலையே குருமன்காடு கற்கைகள் பீடத்திலும் ஏற்பட்டது.

### இ.போ.ச... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வி.சுரேந்தர் ஆகியோரை உடனடியாக இடமாற்றக் கோரி வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கம் பணிப் புறக்கணிப்புப்போராட்டத்தைமுன்னெடுக்கின்றது.

தமது கோரிக்கைக்கு தீர்வு கிடைக்கும் வரை இந்தப் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் இடம்பெறும் என தொழிற்சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் கையொப்பமிட்டு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் டிசெம்பர் 13ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அந்தக் காலப்பகுதியில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சை இடம்பெறவுள்ளது.

மாணவர்களின் நலன்கருதியே நாளை முதல் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.(அ)

### இன்று... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்தில் வடமராட்சி தீருவில் குமரப்பா - புலேந்திரன் நினைவு சதுக்கம், கோப்பாய், சாட்டி, உடுத்துறை துயிலும் இல்லங்களிலும் யாழ். பல்கலைக்கழகத்திலும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

வடமராட்சி தீருவில் நினைவு சதுக்கத்தில் நடைபெறவுள்ள மாவீரர் நிகழ்வில் மக்கள் கலந்துகொள்ள வசதியாக நெல்லியடி, பருத்தித்துறை பஸ் நிலையங்களில் இருந்தும் செல்வச்சந்நிதி கோவிலடியில் இருந்தும் பிற்பகல் 3 தொடக்கம் 4 மணி வரை பேருந்து சேவைகள் நடத்தப்படவுள்ளன.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம், முழங்காவில் துயிலும் இல்லங்களில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கான ஒழுங்கமைப்புக்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்த இரு துயிலும் இல்லங்களிலும் நடக்கும் நிகழ்வுகளில் பொதுமக்களை கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு**

வன்னிவிளாங்குளம், முள்ளியவளை, தேராவில், இரணைப்பாலை, கயட்டை, ஆலங்குளம், முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலும் இல்லங்களிலும், இறுதிப் போர் காலத்தில் மாவீரர்கள் விதைக்கப்பட்ட பகுதிகளிலும் மாவீரர் நாள் நினைவேந்தல் இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் நேற்றுடன் முடிவடைந்துள்ளன.

இதேபோன்று வவுனியாவின் ஈச்சங்குளம், மன்னாரின் ஆட்காட்டிவெளி, பெரியபண்டிவிரிச்சான், திருகோணமலையின் ஆலங்குளம், மட்டக்களப்பின் மாவடி முன்மாரி, தரவை, அம்பாறையின் கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லங்களிலும் மாவீரர் நாளை நினைவேந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ச)

### களைகட்டியது...(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக் கழகங்கள், வவுனியா வளாகம், சனசமூக நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள், பொது இடங்கள் எனப் பல இடங்களில் தலைவர் பிரபாகரனின் படங்கள் வைக்கப்பட்டு கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாட்டத்தில் மக்கள் ஈடுபட்டனர்.

இந்தக் கொண்டாட்டத்தின்போது உதவி தேவைப்படும் மக்கள், முன்னாள் போராளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன. இதேபோன்று தமிழ் அரசியல்வாதிகள் பலரும் தலைவர் பிரபாகரனின் பிறந்ததினத்தை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை வழங்கியிருந்தனர்.

### இராணுவம்...(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர் நிகழ்வுகளை துயிலும் இல்லத்தின் அருகாக உள்ள காணியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து அக்காணியை துப்புரவு செய்வதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஏற்பாடுகளை செய்திருந்தனர். இந்த சிரமதானப் பணியில் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

மக்கள் அங்கு துப்புரவுப் பணியில் ஈடுபட்டபோது அப்பகுதியில் அதிகளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். இதனால் அங்கு பதற்ற நிலை தோன்றியது. அத்துடன் அங்கு சிரமதானப் பணியில் ஈடுபட்டவர்களை இராணுவத்தினர் படங்கள் எடுத்தனர். இதன் மூலம் அங்கு நின்றவர்களுக்கு மறைமுக அச்சுறுத்தலை இராணுவம் ஏற்படுத்தியிருந்தது.

**குழப்பவில்லையாம்!**

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரொசான் செனவிரட்ன தெரிவிக்கையில், கோப்பாய் துயிலுமில்லம் முன்பாக சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்த பகுதியில் எவ்வித அமைதியின்மையும் ஏற்படவில்லை.

துயிலுமில்ல மைதானம் இராணுவ முகாமிற்குள் அமைந்துள்ளமையால் பொது மக்களை இராணுவ முகாமிற்குள் செல்ல அனுமதிக்க முடியாது. இன்றைய தினம் (நேற்று) அங்கு வந்த தரப்பினர் அவர்களின் வேலையை செய்தனர் இராணுவம் தனது வேலையைச் செய்தது - என்று அவர் தெரிவித்தார். (ச)

### ஆயுதங்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்டன.

“பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே அவை மீட்கப்பட்டன. இவை அங்கு எப்போது போடப்பட்டன என்பது குறித்துத் தெரியவில்லை.

நீதிமன்றின் அனுமதியுடன் சிறப்பு அதிரடிப் படையினர் ஊடாக அவை அகற்றப்பட்டன. இன்றைய மாவீரர் நாளைக் குழப்பும் பொருட்டே இவ்வாறு செய்யப்பட்டிருக்கலாம் என மக்கள் மத்தியில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

### சிகிச்சைக்கு...(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட நோயாளி பெண் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த தகவல்கள் வருமாறு,

“கண் கற்றாக்குக்காக சத்திர சிகிச்சை செய்ய கடந்த 23 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசலைக்கு சென்றேன். ஒப்ரேஷன் செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. அப்போது எனது தலை லேசாக அசைந்துவிட்டது. அது என்னையறியமாலே ஆட்டுப்பட்டது. அதற்கு அந்த டொக்டர் இரண்டு மூன்று முறை கன்னத்தில் அறைந்தார். பிறகு என்னை (முறையற்ற சொற்களால்) ஏசினார். என்னை மட்டுமல்ல. இதேபோன்று வேறு ஒருவருக்கும் நடந்தது.”

இதுபற்றி யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் குறித்த தொலைக்காட்சியின் செய்திப் பிரிவு தொடர்பு கொண்டபோது தமக்கு முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை என்றும், முறைப்பாடு கிடைக்கும் பட்சத்தில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார் என்றும் கூறப்பட்டது. (ச)

### நுணாவிலில்...(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுணாவில் மத்தியைச் சேர்ந்த யோகராசா சபேஸ்குமார்(26) ஆகியோரே உயிரிழந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பஸ்ஸின் சாரதியைச் சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்
மரண அறிவித்தல்
நினைவஞ்சலி
கண்ணீர் அஞ்சலி
கட்டணம் இன்றி பிரசுரிக்க
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
எதிரொலி Ethiroli
021 3004848
நிபந்தனைகளுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலை உச்சியில் பாடல்களுக்கு கொம்போஸிங் செய்த ரஹ்மான்



சென்னை, நவ. 27

அரவிந்தசாமி, விஜய் சேதுபதி, சிம்பு, பகத் பாசில், பிரகாஷ்ராஜ், ஜோதிகா, ஐஸ்வர்யா ராஜேஸ் எனப் பெரும் நட்சத்திரப் பட்டாளங்களுடன் புதிய படத்தை தொடங்கியிருக்கிறார் மணிரத்னம்.

இப்படத்தில் பாடல்களுக்கு பெரும் முக்கியத்துவம் கொடுத்திருக்கும் மணிரத்னம், ஏ.ஆர்.ரஹ்மான், கவிஞர் வைரமுத்துவை பாடல் “கொம்போஸிங்”குக்காக மலை உச்சிக்கு 5 நாள்கள் அன்புச் சிறை வைத்துவிட்டார்.

மராட்டிய மாநிலத்தின் மலை உச்சியில் உள்ள மாளிகை ஒன்றிலேயே இருவரையும் தங்க வைத்துள்ளார் மணிரத்னம். ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் அங்கிருந்து அரபிக் கடலை ரசித்தவாறு வைரமுத்து பாடல்களை எழுத, ரஹ்மான் கொம்போஸிங் செய்துள்ளார்.

ஒருநாளிலேயே 6 பாடல்களை எழுதியிருக்கிறார் வைரமுத்து. ரஹ்மான் இரு இரவுகளில் 3 மெட்டுக்களைப் போட்டிருக்கிறார். படத்தின் பெயர் முடிவாகிய போதும் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. (ச)

# மிரட்டினால் றொக்கெட்டின் வீச்செல்லை அதிகமாகும்

## ஐரோப்பாவை மிரட்டுகிறது ஈரான்

தெஹ்ரா, நவ. 27

“ஐரோப்பா எங்களுக்கு மிரட்டலாக இல்லை என நாங்கள் நீண்ட நாட்களாகக் கருதி வந்தோம். அதனாலேயே நாங்கள் றொக்கெட்களின் வீச்சு எல்லையை அதிகரிக்கவில்லை.

எங்களின் றொக்கெட்களின் வீச்சு எல்லை 2 ஆயிரம் கிலோமீற்றருக்குள் உள்ளது. அது தொழில்நுட்ப பற்றாக்குறையால் இல்லை. நாங்கள் இராணுவக் கொள்கையை பின்பற்றி வருகின்றோம்.

ஆனால் எங்களை மிரட்ட விரும்பினால் றொக்கெட்களின் வீச்சின் எல்லையை அதிகரிப்போம்” என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறார் ஈரான் இராணுவத்தின் உப தலைவர் சலாமி.

ஈரான் அரசாங்கத்திற்கு ஐரோப்பிய



நாடுகள் எச்சரிக்கை விடுத்திருந்தன. இதற்குப் பதிலடி கொடுக்கும் விதத்திலேயே நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்த சலாமி மேற்கண்டவாறு எச்சரித்திருந்தார். (ச)

## புலிக்கு பணமா? கொடுத்தவரின் விரலை ருசித்தது

பீஜிங், நவ. 27

புலிக்கு விளையாட்டாக பணத் தாளை உண்ணக் கொடுத்தவரின் விரல்களை அது கடித்துத் தின்றது.

சீனாவின் ஹெனான் மாகாணம் ஜின்ஷியுவான் நகரில் சர்க்கஸ் நடைபெற்றது. இதில் சிங்கம், புலி எனப் பல விலங்குகள் கலந்துகொண்டன.

அங்கிருந்த முதியவர் ஒருவர் கூண்டில் இருந்த புலிக்கு பணத் தாள்களை உண்ணக் கொடுத்தார். பணத்தாளை தின்ற புலி கொடுத்தவரின் விரல்களையும் கடித்தது. வலியால் முதியவர் அலறவே, காவலாளிகள் அவரை புலியிடம் இருந்து மீட்டனர்.

ஆனால், முதியவரின் 2 விரல்களை புலி கடித்துத் தின்றுவிட்டது. (ச)

# பயங்கரவாதிகளின் நிலைகள் மீது எகிப்து விமானப் படை தாக்குதல்

கெய்ரோ, நவ. 27

எகிப்து விமானப்படை நடத்திய தாக்குதல்களில் பயங்கரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர். அத்துடன் அவர்களின் ஆயுதக் கிடங்கும் அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பீர் அல் அபெத் நகரின் பள்ளிவாசலில் கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்த்தப்பட்ட குண்டுவெடிப்பு, துப்பாக்கிச் சூட்டில் 305 பொது மக்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்




கும் விதத்தில் பயங்கரவாதிகளின் இருப்பிடமான வடக்கு சினாய் நகரில் நேற்று முன்தினம் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் பயங்கரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர். அவர்களின் ஆயுதக் கிடங்கும் அழிக்கப்பட்டது என எகிப்து விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொதுமக்கள் மீதான தாக்குதலுக்கு உலக நாடுகள் பலவும் கண்டனங்களை தெரிவித்துள்ளன. இந்தத் தாக்குதலுக்கு எந்தப் பயங்கரவாத அமைப்பும் உரிமை கோராதபோதும், ஐ.எஸ். அமைப்பினரே நடத்தியிருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சூரியனில் மிகப்பெரிய ஓட்டை



நியூயோர்க், நவ. 27

சூரியனின் மேற்பரப்பில் மிகப்பெரிய ஓட்டை விழுந்துள்ளது. இதன் வழியாக அதிவேகமாக வெளியேறும் சூரியக் காற்று, பூமியை சுற்றிக் கொண்டிருக்கும் செயற்கைக் கோள்கள் மற்றும் சூரிய மின்சக்தி கருவிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது என நாசா தெரிவித்துள்ளது.

நாசாவின் சூரிய இயக்கவியல் ஆய்வு மையம், சூரியனின் மேற்பரப்பை கடந்த 8 ஆம் திகதி படம் பிடித்து ஆய்வை மேற்கொண்டது. அந்தப் படத்தில், சூரியனின் மேற்பரப்பில் கறுப்பாக மிகப்பெரிய ஓட்டை ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இதன் வழியாக சூரிய வெப்பக் காற்று அதிவேகமாக வெளியேறி வருகிறது. சூரியனின் மேற்பரப்பில் இருந்து வெப்பக் காற்று வெளியேறுவது அடிக்கடி நிகழும் சாதாரண நிகழ்வு தான் என்றாலும், இந்த ஓட்டை வழியாக அதிவேகத்தில் சூரியக்காற்று வெளியேறி வருகிறது.

சூரியனில் ஏற்படும் அகலமான ஓட்டை ‘கரோனா’ என அழைக்கப்படுகிறது. சூரியனின் காந்தபுல இயக்கம் காரணமாக இந்த ஓட்டைகள் ஏற்படுகிறது. அதில் இருந்து வெளிப்படும் சூரிய பிழம்புகள், கரோனா பகுதிக்குள் தற்காலிக ஓட்டைகளை ஏற்படுத்தும். சூரியனை சுற்றியுள்ள மற்றப் பகுதியை விட, இது அடர்த்தி குறைவான பகுதியாக உள்ளது. வழக்கமான சூரியகாற்றை விட, இந்த ஓட்டையிலிருந்து வெளியேறும் சூரிய ஒளிக்கற்றை துகள்கள் அதிவேகமாக வெளியேறுகிறது என விண்வெளி வானிலை ஆராய்ச்சி மையம் கூறுகிறது.

இந்த அதிவேக ஒளிக்கற்றை, பூமியின் காந்த மண்டலத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனால் செயற்கைக்கோள்களும், சூரிய மின்சக்தி கருவிகளும் பாதிப்படைகின்றன. (ச)

# நெதர்லாந்து நாய்கள் இலங்கை வருகின்றன

கொழும்பு, நவ. 27

இலங்கை பொலிஸ் துறைக்கு நெதர்லாந்திலிருந்து நாய்கள் வரவுள்ளன. இலங்கை பொலிஸ் சேவையில் 10 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த சில நாய்கள் ஓய்வுபெற உள்ளதால் நெதர்லாந்திலிருந்து புதிய நாய்கள் தருவிக்கப்படவுள்ளன.

10 வருங்களுக்கு மேல் சேவையாற்றிய நாய்களுக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட வேண்டும் என்ற பொலிஸ் கால்நடை மருத்துவரின் ஆலோசனைக்கு அமையவே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது என ஆங்கில ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது.

பயிற்றுவிக்கப்பட்ட 250 நாய்கள் 55 பிரிவுகளில் உள்ளன. இந்த நிலையில், இம் மாத இறுதியில் 10 ஆண்டுகள் சேவையை பூர்த்தி செய்யும் 6 நாய்களுக்கு ஓய்வு வழங்கப்படவுள்ளது. இவற்றுக்குப் பதிலாகவே நெதர்லாந்தில் இருந்து புதிய நாய்கள் இறக்குமதி செய்யப்பட உள்ளன. இந்த நாய்கள் ஒவ்வொன்றும் 10 இலட்சம் ரூபா செலவில் கொண்டுவரப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# ஒரே இரவில் கொழும்பில் இணைந்தன 15 ஜோடிகள்



கொழும்பு, நவ. 27

கொழும்பு நகரப் பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லிம்களான 15 ஜோடிகளுக்கு நேற்று முன்தினமிரவு திருமணம் செய்து வைக்கப்பட்டது.

அமைச்சர் பௌசி மற்றும் டுபாய் தூதுவர் முன்னிலையில் ஒரே மேடையில் இந்தத் திருமணங்கள் நடைபெற்றன.

இந்தத் திட்டத்துக்காக இலங்கையில் உள்ள துபாய் தூதரகம் அனுசரணை வழங்கியுள்ளது. ஒவ்வொரு ஜோடிக்கும் 2 இலட்சம் ரூபா செலவில் 15 ஜோடிகளுக்கும், தாலி மற்றும் தளபாடம், பணம் என்பன வழங்கப்பட்டன. (ச)

# மரண தண்டனை! சிறார் பாலியல் குற்றத்துக்கு

போபால், நவ 27

சிறுவர்ளை பாலியல் துஷ்பிரயோகம் செய்தால் மரண தண்டனை விதிக்கப்படும் என இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலம் சட்டம் இயற்றியுள்ளது.

12 வயதுக்கு உள்பட்ட சிறுவர்களைப் பாலியல் பலாத்காரம் செய்தால் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படும். இதேபோன்று கூட்டு பாலியல் பலாத்கார குற்றவாளிகளுக்கும் மரண தண்டனை விதிக்க வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

பாலியல் பலாத்கார குற்றவாளிகளுக்கு அபராதம் மற்றும் தண்டனை அதிகரிப்பு செய்யும் சட்டத்திற்கும் மாநில அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரர் நாளுக்கு தாயகம் தயார்


கோப்பாய்


யாழ். பல்கலைக்கழகம்


சாட்டி


முல்லைத்தீவு களிக்காடு



# நாக்பூரில் இந்தியா சத மழை இலங்கை திண்டாட்டம்

நாக்பூர், நவ. 27

நாக்பூர் டெஸ்டில் முரளி விஜய், புஜாரா, ரோகித் சர்மா ஆகியோரின் சதங்களுடன், விராட் கோஹ்லியின் இரட்டைச் சதமும் இணைய இந்தியா முதல் இன்னிங்ஸிற்காக 610 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இலங்கை - இந்திய அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் போட்டி நாக்பூரில் நடைபெற்று வருகிறது. கடந்த 24ஆம் திகதி ஆரம்பித்த இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி, 205 ஓட்டங்களுள் சுருண்டது.

பின்னர் இந்தியா முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது. இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் ஆட்ட முடிவில் இந்தியா 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 312 ஓட்டங்களைக் குவித்தது. புஜாரா 121 ஓட்டங்களுடனும், விராட் கோஹ்லி 54 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து விளையாடிய கோஹ்லி சிறப்பாக விளையாடி இரட்டைச்சதம் (213) அடித்து ஆட்டமிழந்தார். டெஸ்ட் கிரிக்கெட்டில் விராட் கோலியின் 5ஆவது இரட்டைச் சதம் இதுவாகும்.

இறுதியில் இந்திய அணி, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 610 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில், ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இந்திய அணியின் இந்த மிகப் பெரிய இலக்குக்கு, கோஹ்லியின் இரட்டைச்சதத்துடன், முரளி விஜய் (128), புஜாரா (143), ரோகித் சர்மா (102) ஆகியோரின் சதங்களும் கைகொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் 405 ஓட்டங்கள் பின்னிலையுடன், நேற்று மாலை தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இலங்கை அணி, மூன்றாம் நாளான நேற்று ஆட்ட நேரம் முடியும்போது, ஒரு விக்கெட் இழப்புக்கு 21 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

இன்று ஆட்டத்தின் நான்காம் நாளாகும்.

இந்த ஆட்டத்தின் பார்க்கும்போது இந்திய அணியின் வெற்றிக்கே அதிக சந்தர்ப்பம் உள்ளது. இலங்கை அணி ஏதேனும் அதிசயங்கள் நிகழ்த்தினால் ஆட்டம் சமநிலையில் முடிவடையலாம். (ஐ)

# வெற்றியின் விளிம்பில் ஆஸ்திரேலியா!





பிரிஸ்பேர்ண், நவ. 27

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரின் முதலாவது போட்டியில் வெற்றியின் விளிம்பில் ஆஸ்திரேலிய அணி உள்ளது.

கடந்த 23ஆம் திகதி ஆரம்பித்த இந்தப் போட்டியின் இன்னிங்ஸிற்காக இங்கிலாந்து அணி 302, ஆஸ்திரேலியா 328 ஓட்டங்களையும் சேர்த்தது.

இதனையடுத்து, இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணி, ஆஸ்திரேலியப் பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் நேற்று 195 ஓட்டங்களுள் சுரண்டது.

பின்னர் 170 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் நேற்றுக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, நேற்றைய ஆட்டம் முடியும் போது பான் குறோப்ட் (51), வோர்னர் (60) ஆகியோர் அரைச் சதங்களின் உதவியுடன் விக்கெட் இழப்பின்றி 114 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

இறுதி நாளான இன்று ஆஸ்திரேலிய அணி 56 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றியைத் தனதாக்கிவிடும். இன்று ஒரு நாள் முழுமையாக இருப்பதால் ஆஸ்திரேலியாவின் வெற்றி வாய்ப்புப் பிரகாசமாகவுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 27.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.